# மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்

**கலாத்தியர் 6:7**

மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

# மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

---

சகோதரர்களே,

இதை ஒரு புத்தகத்திலிருந்து எடுத்தேன்.

இது சகோ. பிரன்ஹாம் பேசின செய்தியிலிருந்து எடுக்கப்பட்ட ஒன்றல்ல.

இது எல்லாமே வேதவசன ஆதாரத்தோடு கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே நாம் எச்சரிப்பாக இருக்க இது உதவலாம்.

"நாம் யாராக இருந்தாலும், நாம் விதைக்கும் ஒவ்வொன்றையும் அறுப்போம்" என்று வேதாகமமும் தீர்க்கதரிசியும் கூறுவது நமக்குத் தெரியும்.

இதற்கு வேதத்தில் அநேக எடுத்துக்காட்டுகள் உள்ளன. அதில் சிலவற்றை இங்கு காண்போம். நாம் ஜாக்கிரதையாய் இருக்க அவை நமக்கு உதவும்:



1. **ஏமாற்றினான் - ஏமாற்றினார்கள்**

**யாக்கோபு தன் சகோதரனின் வஸ்திரத்தை அணிந்து கொண்டு தன் தகப்பனிடத்தில் போய் அவனை ஏமாற்றினான். சுமார் 20 அல்லது 25 ஆண்டுகளுக்குப் பின்னர் அவனுடைய பிள்ளைகள் இரத்தக்கறை படிந்த யோசேப்பின் அங்கியை அவனுக்குக் காண்பித்து அவனை ஏமாற்றினர்.**



## 2. கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப் போட்டான் - கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப் போட்டார்கள்

அதோனிபேசேக் என்ற ஒரு ராஜா, தான் வென்ற எழுபது ராஜாக்களுடைய கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப் போட்டான். அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்பட்டது.

"அதோனிபேசேக் ஓடிப்போகையில், அவனைப் பின்தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டார்கள்.

அப்பொழுது அதோனிபேசேக்: எழுபது ராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என்

மேஜையின்கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் என்றான்…” **(நியா. 1:6, 7).**



3. இருப்பு ரதங்கள் - ஆணி

~~~~~~~~~

சிசெரா தனது தொளாயிரம் இருப்பு ரதங்களை இஸ்ரவேலருக்கு விரோதமாக ஒன்றுதிரட்டினான் **(நியா. 4 : 13).**

அவனது மரணத்தைப் பற்றி நாம் வாசிப்பது யாது?

"பின்பு ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஒரு கூடார ஆணியை எடுத்து, தன் கையிலே சுத்தியைப் பிடித்துக் கொண்டு, மெள்ள அவனண்டையில் வந்து, அவன்
~~~~~~~~~

நெற்றியிலே அந்த ஆணியை அடித்துப்போட்டாள்; அது உருவிப்போய், தரையிலே புதைந்தது; அப்பொழுது ஆயாசமாய்த் தூங்கின அவன் செத்துப்போனான்." (வச. 21).

அவனைக் கொல்ல ஒரே ஒரு ஆணிதான் தேவைப்பட்டது. அது ஒரு ஆணியாகும்.



4. கல் - ஏந்திரக்கல்

அபிமெலேக்கு யெருபாகாலின் எழுபது குமாரரையும் ஒரே கல்லின் மேல் கொலை செய்தான் **(நியா. 9 : 5, 17, 24).**

அபிமெலேக்கு எப்படி கொல்லப்பட்டான்?

"...ஒரு ஸ்திரீ ஒரு ஏந்திரக்கல்லின் துண்டை அபிமெலேக்குடைய தலையின்மேல் போட்டாள்; அது

**அவன் மண்டையை உடைத்தது." (வச. 53).**

அவனது மண்டை உடைந்தபோதிலும் அவனது பெருமை உடையவில்லை.

**"...அவன் தன் ஆயுததாரியாகிய வேலைக்காரனைக் கூப்பிட்டு: ஒரு ஸ்திரீ என்னைக் கொன்றாள் என்று என்னைக் குறித்துச் சொல்லாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் கொன்றுபோடு என்று அவனோடே சொன்னான்; அப்படியே அவன் வேலைக்காரன் அவனை உருவக் குத்தினான், அவன் செத்துப்போனான்."**

**"இப்படியே அபிமெலேக்கு தன்னுடைய எழுபது சகோதரரைக் கொலை செய்ததினால், தன் தகப்பனுக்குச் செய்த பொல்லாப்பை தேவன் அவன்மேல் திரும்பும்படி செய்தார்."** (வச. 54, 56).

5. **கண்கள் - கண்கள் & காசா - காசா**

சிம்சோனின் பாவம் கண்களின் இச்சையாயிருந்தது (நியா. 14:1-3; 16:1, 4).

அதற்காக அவன் மேல் வந்த நியாயத்தீர்ப்பு யாது?

“பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக்கொண்டிருக்க வைத்தார்கள்.” (நியா. 16:21)

மேலும் அவன் எந்த இடத்தில் பாவம் செய்தானோ, அந்த இடத்திலேயே பல நாட்களுக்குப் பின்னர் அவனுக்குத் தண்டனை வந்தது.

"பின்பு சிம்சோன் காசாவுக்குப்போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்."

"...அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக்கொண்டிருக்க வைத்தார்கள்." (நியா. 16 :1, 21).



6. அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைக் குறித்து, "சாமுவேல்: உன் பட்டயம் ஸ்திரீகளைப் பிள்ளையற்றவர்களாக்கினது போல, ஸ்திரீகளுக்குள்ளே உன் தாயும் பிள்ளையற்றவளாவாள் என்று சொல்லி; சாமுவேல்

**கில்காலிலே கர்த்தருக்கு முன்பாக ஆகாகைத் துண்டித்துப்போட்டான். (1 சாமு. 15:33)**



7. **ஈட்டி - ஈட்டி**

**தாவீதைக் கொல்லும்படி தன் கையில் ஈட்டியோடு சுற்றிக்கொண்டிருந்த சவுல், முடிவாகத் தன் ஈட்டியின் மேல் தானே விழுந்து, தன்னை மாய்த்துக்கொண்டான் (1 சாமு. 22 : 6 ; 26 : 2,7; II சாமு. 1: 6 - 10).**

**அவன் உயிரோடிருந்த நாட்களில் பல முறை தனது ஈட்டியினாலே தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடப் பார்த்தான் (1 சாமு. 18 : 11; 19 : 10). சவுலின் மரணத்திற்குப் பின் அவனது உடலுக்கு என்ன நேர்ந்தது பாருங்கள்!**

**"...அவன் உடலைப் பெத்சானின் அலங்கத்திலே தூக்கிப்போட்டார்கள்."** (I சாமு, 31: 10).

**இது ஆங்கிலத்தில், அவனது உடலை பெத்சானின் அலங்கத்தோடு சேர்த்துப் பிணைத்து வைத்தார்கள் (and they fastened his body to the wall of Bethshan)' என்று கூறப்பட்டுள்ளது.**

**சவுல் பல ஆண்டுகள் உயிரோடிருந்தான்; ஆனால் முடிவாக அவனது மரணவேளை வரை நியாயத்தீர்ப்பு காத்திருந்தது!**



8. **பத்து - பத்து**

**அப்சலோம் தன் தகப்பனுடைய பத்து மறுமனையாட்டிகளைத் தீட்டுப்படுத்தினான்** (2 சாமு. 15:16; 16:22).

**அவன் எங்ஙனம் மாண்டான்?**

**ஒரே சமயத்தில் பத்து சேவகர் அவனைச் சூழ்ந்து, அவனை அடித்துக் கொன்றார்கள்** (2 சாமு. 18 :15).



9. **50 முழ உயரமுள்ள தூக்குமரம் - 50 முழ உயரமுள்ள தூக்குமரம்**

**ஆமான் மொர்தெகாய்க்கு விரோதமாகச் சதித்திட்டம் தீட்டி, அவனைத் தூக்கிலிட 50 முழ உயரமுள்ள ஒரு தூக்குமரத்தைச் செய்வித்தான்.**

**ஆனால் முடிவாக, தான் செய்வித்த அதே தூக்குமரத்திலேயே அவன் தூக்கிப்போடப்பட்டான் (எஸ்தர் 7 : 9, 10).**

**"படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான்; கல்லைப் புரட்டுகிறவன் மேல் அந்தக் கல் திரும்ப விழும்."** (நீதி. 26:27).